**செய்தி வெளியீடு எண்: 733** **நாள்: 11.10.2018**

**<u>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் HD ஒளிபரப்பு சேவை விரிவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் சென்னை, கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் திருச்சி ஆகிய 5 நகரங்களில் துவக்கப்பட்ட HD ஒளிபரப்பு சேவை தற்போது தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, காரைக்குடி மற்றும் ராமநாதபுரம் ஆகிய 4 பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

HD ஒளிபரப்பில் 380 SD சேனல்களுடன், 45 HD சேனல்களும் சேர்த்து மொத்தம் 425 சேனல்கள் வழங்கப்படும். HD சேனல்களுக்கான மாதக்கட்டணம் ரூ.225+GST ஆகும்.

எனவே, மேற்கண்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் HD ஒளிபரப்பு சேவையை பெற விரும்பும் பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள உள்ளூர் கேபிள் ஆப்ரேட்டரை அணுகி ரூ.500/– செலுத்தி HD செட்டாப் பாக்ஸ் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**